# உங்கள் உரிமைகளை அறியுங்கள்: இறுதி அளிப்பு வாக்குகள்

**ஒரு "இறுதி அளிப்பு வாக்கு" என்பது என்ன? அதைப்பற்றி நான் ஏன் அறிய வேண்டும்?**

- ஒண்டாரியோ / பிரிட்டிஷ் கொலம்பியாவில், பணி நிறுத்தம் ஆரம்பிக்கும் முன்னர், ஒரு வேலை வழங்குபவர் தனது "இறுதி அளிப்பு" பற்றி ஒரு வாக்கெடுப்பு எடுக்க மாகாண அரசாங்கத்திற்கு மனுச் செய்யலாம்.
- ஒரு வேலை வழங்குபவர் "ஒரு இறுதி அளிப்பு வாக்கினை" பயன்படுத்த வேண்டும்போது பணியாளர்களை ஒரு முழுமையற்ற ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கும் உத்தியினைப் பின்பற்றுகிறார். அது பணியாளர்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தி, பல வருடங்களுக்கு அவர்களை ஒரு மோசமான ஒப்பந்தத்தில் சிக்கி விடும் அபாயத்திற்கு உள்ளாக்கலாம்.
- ஒன்றிய பேரம் பேசும் குழு என்ற விதத்தில் எங்களது பணி வேலை வழங்குபவருடன் பணியாளர்களுக்கான மிகச்சிறந்த ஒரு அளிப்பை பேச்சு வார்த்தை மூலம் பெறுவதே ஆகும்.
- ஒரு வேலை வழங்குபவர் ஒரு "இறுதி அளிப்பு வாக்கு" என்ற உத்தியினைப் பயன்படுத்தும்போது, அவர்கள் ஒன்றியக் குழுவினை வேண்டுமென்றே தாண்டிச் சென்று பணியாளர்களிடம் பேதத்தை ஏற்படுத்தி, அச்சத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குகின்றனர்.

**நமது வேலை வழங்குபவர் ஒரு "இறுதி அளிப்பு வாக்கினை" பணியாளர்களுக்கு அனுப்பும்போது என்ன நிகழும்?**

- ஒரு வேலை வழங்குபவர் பணியாளர்களுக்கு தங்களது முன்மொழியும் அளிப்பைப் பற்றிய விவரம் கொண்டுள்ள ஒரு அறிக்கையை அனுப்புவார். அவர் அதனை ஒரு புதிய ஒப்பந்தத்திற்கான நியாயமான மற்றும் பொருத்தமான பங்கீடு என்று அறிவித்துக் கொள்வார்.
- மாகாண பணியாளர் அமைச்சகம் பணியாளர்களின் குழுக்கள் அனைத்திற்கும் ஒரு மின்னஞ்சல் மூலம் கணினி வழி வாக்களிப்பு அறிவிப்பையும் வாக்குச் சீட்டையும் அனுப்பி வேலை வழங்குபவரின் அளிப்பு குறித்து வாக்களிக்கக் கேட்கும்.
- நீங்கள் ஒருபோதும் வேலை வழங்குபவரின் இறுதி அளிப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதற்கு நீங்கள் "இல்லை" என்று வாக்களியுங்கள்.
- பெரும்பான்மையோர் "இல்லை" என்று வாக்களித்தால் அதற்கு அர்த்தம், ஒன்றிய பேரம் பேசும் குழு ஒரு சிறந்த ஒப்பந்தத்தைப் பெற திரும்பவும் சென்று பேச்சு வார்த்தை நடத்த இயலும் என்பதே ஆகும்.
- பிறகு, நாம் தயாராக இருந்தால், நாம் பணி நிறுத்தம் மேற்கொள்ள முடியும்!

**வேலை வழங்குபவரிடமிருந்து வரும் எந்த ஒரு இறுதி அளிப்பு வாக்கும் உங்களது ஒன்றிய பேரம் பேசும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது அல்ல.**

Toronto 1-800-663-6841 (toll free) or 905-602-7477 | Ottawa 613-567-3528

Vancouver 604-540-7774 | Halifax 902-455-1095 | Thunder Bay 807-473-9651

www.seiulocal2.ca | www.justiceforjanitors.ca